ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2120/28 - 2019 අප්‍රේල් මස 27 වැනි සෙනසුරාදා - 2019.04.27

*2120/28 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஹதரலியத்த நீர் வழங்கல் திட்டத்தின், அம்பாவ நீர் களஞ்சிய தாங்கியை நிர்மாணிப்பதற்கும் மற்றும் நீர்க் குழாய்களைப் பொருத்துவதற்கும் காணித்துண்டுகள் தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
*2019, ஏப்பிறல் 17.*

*5/ 2/ 1/ 1463.*


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், ஹதரலியத்த பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 389, அம்பாவ கிராம அலுவலர் பிரிவில், அம்பாவ கிராமத்தில் அமைந்த இறுதி கிராம வரைபட இலக்கம் 223, மேலதிக இலக்கம் 2, படிவ இலக்கம் 2 இல் காணித்துண்டிலக்கம் "A" மற்றும் "B" (காணித்துண்டிலக்கம் 184) இன் பகுதியாகக் குறிப்பிடப்படும் "தலாகொலேவத்த என்னும் பெயருடைய காணியில் கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 15 பேர்ச்சஸ் அளவிலான காணித்துண்டுகள் இரண்டு -

1. காணித்துண்டின் இலக்கம் : காணித்துண்டு எழுத்து "A" (காணித்துண்டிலக்கம் 184 இன் பகுதி)
காணியின் பெயர் : தலாகொலேவத்த
காணியின் எல்லைகள் -

வடக்கு : இறுதி கிராம வரைபட இலக்கம் 223 இல் காணித்துண்டு இலக்கம் 171 ;
கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி மற்றும் கொன்கிறீட் (சிமெந்து) பாதை (குதகலே பாதை) ;
தெற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி.

2. காணித்துண்டின் இலக்கம் : காணித்துண்டு எழுத்து "B" (காணித்துண்டிலக்கம் 184 இன் பகுதி)
காணியின் பெயர் : தலாகொலேவத்த
காணியின் எல்லைகள் -

வடக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : கொன்கிறீட் (சிமெந்து) பாதை (குதகலே பாதை) ;
தெற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி.

மேற்குறிப்பிடப்படும் காணித்துண்டுகளுக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

திரு. எஸ். எம். பிரியன்த குமார,
இலக்கம் 90/1, வல்பொலபிட்டிய ஹேன,
ரங்கமுவ,
ஹதரலியத்த.

05-201

---

திருத்தம்

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.03.26 ஆந் திகதிய 2064/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் இல. 3A ஆம் பக்கத்தில் இலக்கம் 04-376 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட கட்டளையில், பொல்பிதிகம நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் அலுவலகப் பொறுப்பதிகாரி உத்தியோகபூர்வ விடுதி எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும், அது தெதுரு ஓய நீர் வழங்கல் திட்டத்தின் பொல்பிதிகம அலுவலகப் பொறுப்பதிகாரி உத்தியோகபூர்வ விடுதி எனத் திருத்தியமைக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஏப்பிறல் 04.

5/2/2/1337.

05-202

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.